# ஏழைகளின் அரண்மனை

# A PALACE FOR THE POOR

## 120 Years Of Legacy





## 1905 - 2025

## Ramakrishna Mission Students' Home



**"She is Sarada, Saraswati; She has come to impart knowledge. She is full of the rarest wisdom. Is she of the common run? She is my Shakti." - Sri Ramakrishna**




**They alone live who live for others, the rest are more dead than alive.**

**--Swami Vivekananda**

RAMAKRISHNA MATH
P.O. BELUR MATH, DIST. HOWRAH
WEST BENGAL : 711 202



## MESSAGE

The Students' Home in Chennai is dedicated to the holistic development of its orphan students, providing them with accommodation, nourishment and education with great care and attention. Their growth is nurtured in physical, intellectual, moral, and spiritual dimensions. For over a century, this Institution has shaped them into ideal citizens of the nation. The teachings of Swami Vivekananda, particularly his call to serve the needy, are brought to life through the work done at the Students' Home. It is in truth a living example of love, service and sacrifice.

I pray to Sri Ramakrishna, Holy Mother Sri Sarada Devi and Swami Vivekananda for their perpetual blessings on the Students' Home

**Swami Gautamananda**

**President**

**Ramakrishna Math and Ramakrishna Mission**

# Preface

It is with deep reverence and joy that we present this humble booklet on the Ramakrishna Mission Students' Home, Chennai. What began in 1905 as a modest effort to shelter and educate a handful of destitute boys has, over the decades, grown into a vibrant and holistic educational centre, rooted in Swami Vivekananda's ideals of man-making and character-building education.

This Home is more than just a place of learning. It is a living expression of the guru-griha vasa tradition, where monks, dedicated teachers and lay devotees share their lives with students, imparting not only knowledge, but also values, discipline, and spiritual aspiration. Here, education is not confined to classrooms — it permeates every aspect of daily life,

from selfless service to silent prayer, from technical training to moral development.

In today's world of rapidly expanding infrastructure and material advancement, this Home stands as a reminder that the true strength of an institution lies in its purity, unselfishness, and spiritual foundation.

We dedicate this publication with gratitude to the great souls who built this Home with their love, hard work and prayers.

Secretary
Ramakrishna Mission Students' Home
Chennai

Akshaya Tritiya 30/04/2025

Printed by Multi Craft

Subsidised Price Rs.5.00/-

# RAMAKRISHNA MISSION STUDENTS' HOME

**Mylapore, Chennai - 600 004.**

This is one of the earliest of the institutions meant to actualize Swamiji's concept of guru-griha-vasa, with tyagis in charge, imparting life-giving, character-building and man-making education. This Home, in itself, is one glorious example of the early attempts made by Swamiji's brother disciples to actualize his vision of guru-griha-vasa. The Madras Students' Home is a unique institution which seeks to realize a large number of Swamiji's educational concepts. Character-building attempts form the keynote, for which the guru-griha-ashrama environment is

preserved to a large extent by the tyagis, thanks to the South Indian orthodoxy. These tyagis, comprising monks and highly dedicated devotees of the Mission, constantly exert an unconscious influence on the boys residing with them. As a valuable means of acquiring knowledge, the antevasins (residential students) are taught concentration of mind through silent prayer, contemplation, and chanting of Vedic and other hymns. Apart from acquiring mere theoretical knowledge, the boys are trained to do almost all the work of the Home themselves - from sanitation and campus-cleaning to worship. Furthermore, the technical institute attached to the Home trains the boys in various branches of engineering and

technology at the diploma level. By teaching the Upanishads, the Bhagavad Gita, and Swamiji's Works, the spirit of true religion or spirituality is inculcated in the boys. By making them participate in the Mission's philanthropic activities like relief work and free coaching of poor boys, etc., the idea that education should be productive of human welfare gets implanted in their young minds.

The Home was started by Swami Ramakrishnananda, whom Swamiji called the 'Mother of the Math' in praise of his chief passion for the performance of duties pertaining to the Math and Sri Ramakrishna's worship and service. His chief lieutenant in this project was C. Ramaswamy Iyengar (whom he lovingly

called Ramu). Ramu was dedication and unselfishness personified. Another of his unforgettable companion in shaping the Students' Home project was C. Ramanujachariar (Ramanuju for short), a cousin of Ramu. On Ramanuju fell the mantle of becoming the Secretary when Ramu passed away in 1932. Ramu-Ramanuju were the twin souls fortunate to receive the transforming touch of Swami Ramakrishnananda's personality in their dedicated service to the Students' Home. The blessings of Shashi Maharaj (as Swami Ramakrishnananada used to be called) were enough to fill the heart of Ramu with tremendous zeal and an 'impelling power', as he himself wrote later. He got the Home formally dedicated by Shashi Maharaj on 17 February 1905,

which then housed seven poor, destitute boys. However, the institution in its present form came into existence much later — in 1921. After the dedication ceremony in 1905 and worship of Sri Guru Maharaj's picture, Shashi Maharaj spoke the following memorable words, which epitomize Swamiji's message for our institutions:

*Anna-danam is spoken of as a maha-danam and is considered very sacred in our country. And vidya-danam is greater. But the greatest is the conferring of spiritual knowledge (jnana-danam). The harmonizing of all the three should be the aim of this Institution. May Sri Ramakrishna bless the undertaking with success.*

Swami Brahmananda, the first President of the Ramakrishna Math and Ramakrishna Mission and the spiritual son of Sri Ramakrishna, sought to fulfil in a humble way Swamiji's cherished desire — the combination of the moral and spiritual disciplines of the Sanatana Dharma, the ancient religion of our country, with the advanced intellectual power and practical wisdom acquired through Western education, particularly its science and technology. He provided, as it were, the finishing touch to the shaping of the Students' Home. Shashi Maharaj used to say that whatever Swami Brahmananda touched not only became pure, but also got purifying power. His towering spiritual personality infused fresh life and vigour in the Home.

In 1917 he laid the foundation of the new building of the Home, where it now stands. Later he declared it open on the sacred day of Akshaya Tritiya in 1921. He had chosen this day for the inauguration because Akshaya means 'inexhaustible', and any work begun on that day would flourish with inexhaustible resources and strength. Swami Brahmananda's chief contribution to the growth of the Mission and its institutions (and the Home was no exception) was the creation of a rarefied and permanent spiritual atmosphere in them. This drew the dedicated workers, monastic and lay, into a current of purity and unselfishness as if by an unconscious power. On that memorable day of the opening ceremony, an eye-witness account by Ramaswamy Iyengar says that

Swami Brahmananda stood meditating for some time to invoke the blessings of Sri Ramakrishna before entering the new building. He then entered by setting his right foot first across the threshold, when flowers were showered upon him and all around. Then he performed the abhishekam and initiated the worship of Sri Guru Maharaj. Soon after, he went into samadhi and remained still in that exalted mood of God-consciousness for a long time. Through that he transmitted to the institution spiritual influence and power to sustain it for ages. He stayed in the new premises of the Home for over a month in order to charge it with the spiritual power needed for the years to come. Ramu writes: 'He created in the Home an atmosphere of love, gentleness, peace and

spiritual fervour, which one feels palpably even today.'

Institutions, we should remember, are not just brick and mortar, nor are they just sophisticated infrastructure - the modern telephones and fax machines, computers, e-mail, and the internet. They are sustained by purity and unselfishness, and intellectual, moral, and spiritual power. Amidst the maddening pace of quantitative expansion of institutions in the present day, it behoves us to reverentially meditate on the beaming countenance of Swami Brahmananda standing in samadhi at the opening ceremony of the Madras Students' Home, and on the soul-stirring, purifying, and penetrating spiritual atmosphere he

created there for the benefit of the future generations. It is the collective responsibility of all of us not only to draw from, but also to sustain and contribute to, however little we can, this atmosphere of purity, morality, and spiritual power. Without this, the Mission's institutions would run a great risk of degenerating into well-furnished and well-maintained store-houses of sophisticated, ultra-modern infrastructure. Let us all beware of this danger and pay heed to the following words of caution uttered by Swami Brahmananda at the inaugural ceremony of the Home in Madras in 1921:

*Through the grace of Sri Guru Maharaj a palace has been built for the poor, and*

*great is your responsibility now. You must ever be on your guard lest luxury or ease or a sense of self-sufficiency should creep into it, for they will tarnish the ideals for which the Home stands.*

The Students' Home in Madras, after becoming a force in itself, and after getting a full-fledged technical wing attached to it, addressed itself to the task of starting day schools of various grades. Although this is chronologically a much later development, occuring in history around 1932, we mention it at this point to show how the small seed sown by Swami Ramakrishnananda had by this time grown into a gigantic banyan tree — much like what Sri Ramakrishna had wanted Swamiji to become. Such is the enormous

creative power of bhakti, of which we hear in Mahavir Hanuman's exploits in the Ramayana. This group of schools gradually attained such a magnitude that for their efficient management they had to be consitituted into a separate Mission centre in 1948. At present this centre is called the Ramakrishna Mission Ashrama, T.Nagar having three higher secondary schools and three primary schools.



# முன்னுரை

சென்னை ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம் குறித்த இந்த எளிமையான சிறு புத்தகத்தை நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வழங்குகிறோம்.

1905ஆம் ஆண்டு ஒரு சில ஆதரவற்ற சிறுவர்களுக்கு தங்குமிடம் அளித்து கல்வி கற்பிப்பதற்கான ஒரு சாதாரண முயற்சியாகத் தொடங்கிய இது, 120 ஆண்டுகளாக, சுவாமி விவேகானந்தரின் மனிதனை உருவாக்குதல் மற்றும் குணநலன்களை வளர்ப்பதற்கான கல்வியின் கொள்கைகளில் வேரூன்றிய ஒரு துடிப்பான மற்றும் முழுமையான கல்வி மையமாக வளர்ந்துள்ளது.

இந்த இல்லம் கல்வியை கற்றுத்தரும் இடம் மட்டுமல்ல.இது குரு-கிருக வாச மரபின் உயிருள்ள வெளிப்பாடாகும். இங்கு துறவிகள், அர்ப்பணிப்புள்ள

ஆசிரியர்கள் மற்றும் பக்தர்கள் தங்கள் வாழ்க்கையை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள், அறிவை மட்டுமல்லாமல், நல்ல விழுமியங்கள், ஒழுக்கம் மற்றும் ஆன்மீகப் போதனைகளையும் வழங்குகிறார்கள். கல்வி என்பது இங்கு வகுப்பறைகளோடு நின்றுவிடுவதில்லை, தன்னலமற்ற சேவை முதல் மௌன பிரார்த்தனை வரை, தொழில்நுட்ப பயிற்சி முதல் தார்மீக வளர்ச்சி வரை அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இங்கு கல்வி ஊடுருவிச்செல்ல வழி செய்யப்படுகிறது.

வேகமாக விரிவடைந்து வரும் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தை மட்டுமே முன்னேற்றமாக கருதும் இவ்வுலகில், ஒரு நிறுவனத்தின் உண்மையான பலம்

அதன் தூய்மை, தன்னலமற்ற தன்மை மற்றும் ஆன்மீக அடித்தளத்தில் உள்ளது என்பதை எங்கள் இல்லம் நினைவூட்டுகிறது.

இவ்வில்லத்தை அன்பு, கடின உழைப்பு பிரார்த்தனைகளால் கட்டிய மற்றும் எல்லா வகையிலும் உதவிய சிறந்த பெரியோர்களுக்கு நன்றியுடன் இந்தச் சிறு பதிப்பை அர்ப்பணிக்கிறோம்.

**செயலாளர்**
ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம்
சென்னை



Scan QR Code To Subscribe To Our YouTube Channel

Scan QR Code To Subscribe To Our WhatsApp Channel

# ராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லம்

மயிலாப்பூர், சென்னை.

**சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ண மாணவர் இல்லம்,** சுவாமிஜியின் 'குரு-க்ருஹ-வாச' (குருகுல கல்வி முறை) கருத்தை நடைமுறைப் படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஆரம்பகால நிறுவனங்களில் இவ்வில்லம் ஒன்றாகும். துறவிப் பெருமக்களும், தன்னலமற்றத் தொண்டர்களும், நல்ல குணநலன்களோடு கூடிய மனிதர்களை உருவாக்குவதற்கும், உயிரூட்டும் கல்வியை வழங்குவதற்கும் பொறுப்பேற்றுள்ளனர். இந்த இல்லம், சுவாமிஜியின் 'குரு-க்ருஹ-வாசம்' பற்றிய பார்வையை அவரது சகோதரச் சீடர்கள் நிறைவேற்ற மேற்கொண்ட

ஆரம்பகால முயற்சிகளுக்கு ஒரு புகழ்பெற்ற எடுத்துக் காட்டு. சென்னை மாணவர் இல்லம் சுவாமிஜியின் கல்வி பற்றிய கருத்துகளை நடை முறைப் படுத்தும் ஒரு தனித்துவமான நிறுவனம். இவ்வில்லத்தில், குணநலன்களை உருவாக்கும் முயற்சிகள் மிக முக்கிய அம்சமாக அமைகின்றன. தொன்று தொட்ட தென்னிந்திய பாரம்பர்யம், குரு-க்ருஹ சூழலை பாதுகாக்க ஆசிரம நிர்வாகிகளுக்கு பெரிதும் உதவுகின்றது. துறவிகள் மற்றும் ராமகிருஷ்ண இயக்கத்தின் மிகவும் அர்ப்பணிப்புள்ள பக்தர்களை தன்னார்வத் தொண்டர்களாகக் கொண்ட நிர்வாகம், இவ்வில்லத்தில் தங்களுடன் வசிக்கும் சிறுவர்கள் மீது இயல்பாக நல்லத் தாக்கத்தை தொடர்ந்து ஏற்படுத்துகிறார்கள். நல்லறிவைப் பெறு

வதற்கான ஒருமதிப்பு மிக்க வழிமுறையாக, மாணவர்கள், பிரார்த்தனை, தியானம் வேதம் மற்றும் பக்திப் பாடல்களை ஓதுவதன் மூலம் மனதை ஒருமுகப்படுத்தக் கற்றுக் கொடுக்கப் படுகிறார்கள். வெறும் புத்தக அறிவைத் தவிர, சுகாதாரம் மற்றும் வளாகத்தை சுத்தம் செய்வது முதல் வழிபாடு வரை, ஏறத்தாழ இல்லத்தின் அனைத்து வேலைகளையும் சிறுவர்கள் தாங்களாகவே செய்யப் பயிற்சி அளிக்கப் படுகிறார்கள். மேலும், இல்லத்தின் தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறுபிரிவுகளில் இளைஞர்களுக்கு டிப்ளமோ பயிற்சிஅளிக்கிறது. உபநிடதங்கள், பகவத்கீதை மற்றும் சுவாமிஜியின் படைப்புகளைக் கற்பிப்பதன்மூலம், மதங்களின் சாரம்

மற்றும் ஆன்மீகம் சிறுவர்களுக்கு புகட்டப்படுகிறது. நிவாரணப் பணிகள் மற்றும் ஏழை சிறுவர்களுக்கு இலவசப் பயிற்சி போன்ற நமது இயக்கத்தின் நடவடிக்கைகளில் அவர்களை பங்கேற்கச் செய்வதன் மூலம், கல்வி மனித நலனுக்காக உதவ வேண்டும் என்ற கருத்து அவர்களின் இளம் மனங்களில் பதிக்கப்படுகிறது.

மடம் தொடர்பான கடமைகளைச் செய்வதிலும், ஸ்ரீராமகிருஷ்ணரின் வழிபாடு மற்றும் சேவையிலும் இருந்த ஆர்வத்தைக் கௌரவிக்கும் வகையிலும் சுவாமிஜியால் 'மடத்தின்தாய்' என்று போற்றப்படும், சுவாமி ராமகிருஷ்ணானந்தரால், இந்த இல்லம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தில் அவரது தலைமை 'லெப்டினன்ட்' ராமு

என்று அன்புடன் அழைக்கப்பட்ட சி.ராமசாமி ஐயங்கார். அர்ப்பணிப்பு மற்றும் தன்னலமற்ற தன்மையின் உருவமே ராமு. மாணவர் இல்லத் திட்டத்தை வடிவமைப்பதில் அவரது மறக்க முடியாத மற்றொரு துணை ராமனுஜு என்ற சி. ராமானுஜாச்சாரியார். ராமுவின்உறவினர். 1932 இல் ராமு காலமான போது, ராமானுஜு செயலாளராக பொறுப்பேற்றார். மாணவர் இல்லத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ததில் சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் பேராசியைப் பெற்ற இரட்டை ஆன்மாக்களான ராமு-ராமானுஜு, பாக்கியவான்கள். சசிமகாராஜ் என்று அழைக்கப் பட்ட சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் ஆசீர்வாதங்கள், ராமுவின் இதயத்தை மிகுந்த வைராக்கியத்தாலும்,

*‘தூண்டும் சக்தியாலும்’ நிரப்ப போதுமானதாக இருந்தன, என்று ராமுவே பின்னர் எழுதினார். 1905 பிப்ரவரி 17 அன்று ராமு, ஏழு ஆதரவற்ற ஏழை மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இல்லத்தை சசி மகாராஜால் முறையாக அர்ப்பணித்தார். ஸ்ரீகுருமகாராஜின் வழிபாட்டிற்குப்பிறகு, சசி மகாராஜ் பின்வரும் மறக்க முடியாத வார்த்தைகளைப் பேசினார், இது ராமகிருஷ்ண நிறுவனங்களுக்கான சுவாமிஜியின் செய்தியை எடுத்துக் காட்டுகிறது:*

***அன்னதானம் ஒரு மகாதானமாகப் பேசப் படுவதோடு நம் நாட்டில் மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. வித்யா-தானம் அன்னதானத்தை விட சிறந்தது. ஆனால் மிகப் பெரியது ஆன்மீக***

**அறிவை வழங்குவதாகும் (ஞான-தானம்). இந்த மூன்றையும் இசைவாக வழங்குவதே இந்த நிறுவனத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த முயற்சியை வெற்றி பெறச் செய்யட்டும்.**

*ராமகிருஷ்ண மடம் மற்றும் ராமகிருஷ்ண மிஷனின் முதல் தலைவரும், ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீக புதல்வருமான சுவாமி பிரம்மானந்தர், சுவாமிஜியின் மனமார்ந்த விருப்பமாகிய பண்டைய சனாதன தர்மத்தின், தார்மீக மற்றும் ஆன்மீகம் – மேற்கத்திய கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் மூலம் பெறப்பட்ட முன்னேறிய அறிவு மற்றும் நடைமுறை ஞானம் – இரண்டின் சங்கமமாகிய கல்வியை ஒரு எளிய வழியில் நிறைவேற்ற முயன்றார். மாணவர் இல்லத்தின் ஒட்டுமொத்த*

வடிவமைப்பை நேர்த்தியாக்கினார். சுவாமி பிரம்மானந்தர் தொட்டதெல்லாம் தூய்மையாவது மட்டு மல்லாமல், மற்றவைகளைத் தூய்மையாகும் சக்தியையும் அவை பெறும் என்று சசி மகாராஜ் கூறுவார். சுவாமி பிரம்மானந்தரின் உயர்ந்த ஆன்மீக சக்தி, இல்லத்தில் புதிய உயிர்த் துடிப்பையும், வீரியத்தையும் ஊட்டின.

1917 ஆம்ஆண்டு, இப்போது இருக்கும் இடத்தில், இல்லத்தின் புதிய கட்டிடத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினார். பின்னர், 1921 ஆம் ஆண்டு அக்ஷயதிரிதியை புனித நாளில் அதைத் திறந்து வைத்தார். அக்ஷய என்றால் சூதேயாதது'. அந்த நாளில் தொடங்கும் எந்தவொரு வேலையும் வற்றாத வளங்கள் மற்றும் வலிமையுடன்

செழிக்கும் என்று அவர் இந்த நாளைத் திறப்பு விழாவிற்குத் தேர்ந்தெடுத்தார். மிஷன் மற்றும் அதன் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு சுவாமி பிரம்மானந்தரின் முக்கிய பங்களிப்பு எல்லா இடங்களிலும் **ஒரு அரிய நிரந்தர ஆன்மீக சூழலை உருவாக்குவதாகும்;** இல்லமும் இதற்கு விலக்கல்ல. துறவிகளும் மற்றவர்களும் ஒரு அதீத சக்தியால் ஈர்க்கப்பட்டு தூய்மையான தன்னலமற்ற தன்மையில் கரைந்தனர். மறக்க முடியாத திறப்பு விழா நாளில், ராமசாமிஐயங்கார் நேரில் கண்ட காட்சி:

'புதிய கட்டிடத்திற்குள் நுழைவதற்கு முன்பு, ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆசிகளைப் பெறுவதற்காக சுவாமி பிரம்மானந்தர் சிறிது நேரம் தியானத்தில் நின்றார்; பின்னர் தனது வலது பாதத்தை முதலில்

வைத்து உள்ளே நுழைந்தார். அப்போது அவர் மீதும், சுற்றிலும் மலர்கள் பொழியப்பட்டன. பின்னர் அவர் அபிஷேகம் செய்து ஸ்ரீகுரு மகாராஜரின் வழிபாட்டைத் தொடங்கினார். சிறிது நேரத்திலேயே, சமாதியில் மூழ்கி, நீண்ட நேரம் கடவுள் உணர்வோடு உயர்ந்த இறை நிலையில் அசையாமல் இருந்தார். அதன் மூலம் பல ஆண்டுகளுக்குத் தேவையான ஆன்மீக செல்வத்தையும், சக்தியையும் இவ்வில்லதிற்கு வழங்கினார்.'

வரவிருக்கும் பல ஆண்டுகளுக்குத் தேவையான ஆன்மீக சக்தியை நிரப்புவதற்காக அவர் ஒரு மாதத்திற்கும் மேலாக இல்லத்தின் புதியவளாகத்தில் தங்கினார். ராமு எழுதுகிறார்: 'அவர் இல்லத்தில் அன்பு, மென்மை, அமைதி

மற்றும் ஆன்மீக உற்சாகத்தின் சூழ்நிலையை உருவாக்கினார், அதை இன்றும் ஒருவரால் உணரமுடியும்.'

நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இது போன்ற நிறுவனங்கள் வெறும் செங்கல் மற்றும் சுண்ணாம்பு மட்டும் அல்ல, அவை வெறும் அதிநவீன தொலை பேசிகள் மற்றும் தொலை நகல் இயந்திரங்கள், கணினிகள், மின்னஞ்சல், இணையம் இன்ன பிற அல்லவே அல்ல. அவைதூய்மையாலும், தன்னலமற்றத் தன்மையாலும், அறிவுசார், தார்மீக மற்றும் ஆன்மீக சக்தியாலும் நிலை நிறுத்தப்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் நிறுவனங்களின் விரிவாக்கத்தின் வெறித்தனமான வேகத்திற்கு மத்தியில், சென்னை

மாணவர் இல்லத்தின் திறப்பு விழாவில் சமாதியில் நின்ற சுவாமி பிரம்மானந்தரின் ஒளிரும் முகபாவனையையும், எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக அவர் அங்கு உருவாக்கிய ஆன்மீக எழுச்சியையும், தூய்மையையும், ஊடுருவும் ஆன்மீக சூழலையும் பயபக்தியுடன் தியானிப்பது நமக்கு அவசியமானது. தூய்மை, ஒழுக்கம் மற்றும் ஆன்மீக சக்தியின் இந்த சூழ்நிலையிலிருந்து நாம் நன்மை பெறுவது மட்டுமல்லாமல், குறைவாக இருந்தாலும், நம்மால் முடிந்த அளவு அதைப் பேணிப் பங்களிப்பதும் நம் அனைவரின் பொறுப்பாகும். இது இல்லாமல் போனால், மிஷனின் நிறுவனங்கள் நன்கு அமைக்கப் பட்ட மற்றும் நன்கு பராமரிக்கப்படும் அதிநவீன, உள் கட்டமைப்புகளின் கிடங்குகளாக சிதைவடையும் அபாயம்

உள்ளது. இந்த ஆபத்தைப் பற்றி நாம் அனைவரும் எச்சரிக்கையாக இருப்போம். 1921 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள இல்லத் தொடக்க விழாவில் சுவாமி பிரம்மானந்தர், ராமுவிற்குக் கூறிய பின்வரும் எச்சரிக்கைக்கு கவனம் செலுத்துவோம்:

'ஸ்ரீ குருமகாராஜின் அருளால் ஏழைகளுக்காக ஒரு அரண்மனை கட்டப்பட்டுள்ளது, இப்போது உங்கள் பொறுப்பு மிகப்பெரியது. ஆடம்பரம், வசதி அல்லது தன்னிறைவு-உணர்வு அதில் ஊடுருவிவிடக் கூடாது என்பதில் நீங்கள் எப்போதும் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் அவை இந்த இல்லத்தின் சிறந்த, உயரிய விழுமியங்களைக் குலைத்து விடும்.'

சென்னை மாணவர் இல்லம், ஒரு தனிப் பெரும் சக்தியாக மாறி, பின் அதனுடன் ஒரு முழுமையான தொழில் நுட்பப்பிரிவையும் இணைத்த பிறகு, பல்வேறு விதமான பள்ளிகளைத் தொடங்கும் பணியில் ஈடுபட்டது. இது 1932 ஆம் ஆண்டு வரலாற்றில் நிகழ்ந்த ஒரு பிற்கால வளர்ச்சியாக இருந்தாலும், ஸ்ரீராமகிருஷ்ணர் இட்ட விதை வளர்ந்து விவேகாநந்தராக மாறியதைப் போல், சுவாமி ராமகிருஷ்ணானந்தர் விதைத்த சிறு விதை ஒரு பிரம்மாண்டமான ஆலமரமாக எவ்வாறு வளர்ந்தது என்பதைக் காட்ட இந்த இடத்தில் இதைக் குறிப்பிடுகிறோம். ராமாயணத்தில் மகாபக்த வீர ஹனுமானின் வீர, தீரச் செயல்களை நாம் ரசிக்கிறோம். இவைகளெல்லாம் **பக்தியின் மகத்தான படைப்புச் சக்தி என்று சொல்லவும் வேண்டுமா?.**

இந்தப் பள்ளிகள் படிப்படியாகப் பெரிய அளவு வளர்ச்சியை அடைந்ததால், திறமையான நிர்வாகத்திற்காக 1948 ஆம் ஆண்டில், இப்பள்ளிகளின் நிர்வாகம் மிஷனின் தனி மையமாக மாற்றப் பட்டது. தற்போது இந்த மையம், தி.நகர் ராமகிருஷ்ண மிஷன் ஆசிரமம் என்று அழைக்கப்படுகிறது, இதில் மூன்று உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மூன்று தொடக்கப் பள்ளிகள் உள்ளன.



Anna N. Subramanian after completing his matriculation joined the Ramakrishna Home in Madras. In 1935 he became the Headmaster, he was a devoted disciple of Mahapurusha Maharaj. He embodied humility and compassion, deeply committed to the ideals of Guru Maharaj. Though clad in simple white robes, he lived the true life of a Sanyasi. His calm demeanor, ever-smiling face, and peaceful presence radiated joy to all around him.



Swami Shivananda

You loved Sri Guru Maharaj,... Do you think He shall forsake You now? Never. You are bound with Him with everlasting ties. Your body, soul and mind, everything are His. His strength is your strength.

So have faith and love on Him. He made you conspicuous here; He will make you more conspicuous hereafter. Ramu and Ramanuju have become correlative terms. Who else will step into his shoes except you? Ramu gave his all to serve Him.



Sri C. Ramanujachariar

You will also succeed in doing the same. My blessings and best wishes to you. May His light shine within you always. Affectionately ever yours.

**Swami Shivananda**

**Preisident ,Ramakrishna Math and mission (1932)**



Anna-danam is spoken of as a maha-danam and is considered very sacred in our country. And vidya-danam is greater. But the greatest is the conferring of spiritual knowledge (jnana-danam). The harmonizing of all the three should be the aim of this Institution. May Sri Ramakrishna bless the undertaking with success.

Swami Ramakrishnanandaji Maharaj

Whatever Swami Brahmanandaji Maharaj touched not only became pure but also got the purifying power. It is not possible for us therefore to estimate what the Home owes to him.



**Swami Ramakrishnanandaji Maharaj**

Swami Brahmanandaji Maharaj stayed in the new premises of the Home for over a month in order to charge it with the spiritual power needed for the years to come. He created in the Home an atmosphere of love, gentleness, peace and spiritual fervour, which one feels palpably even today.



**--Ramaswamy Iyengar**

**Ramakrishna Mission Students' Home**

**66, Sir P.S.Sivaswamy Salai, Mylapore**
**Chennai - 600004, Tamilnadu, India.**